திரு. கரு. சீமைச்சாமி : இந்த ரோட்டுக்குக் கிட்டத்தட்ட 21 லட்சம் ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். எத்தனை லட்சம் செலவழித்தாலும், ரோடு அமைத்த பிறகு அங்கே மணல் அடித்து மூடிவிடுகிறது. அதுதான் அங்கே பெரும் பிரச்னை. இரவில் ஒன்றுமில்லாமல், பகலில் பார்த்தால் மணல் மூடிவிடுகிறது. அதைத் தடுக்கத் திட்டம் இருக்கிறதா? சவுக்கு மரங்களை வைத்துத் தடுக்கலாம் என்கிற திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல, சில வகை மரங்களை வளர்ப்பது பற்றியும் பரிசீலனை செய்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம்.

Idols dug out at Veerapandi

* 620 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether a number of idols were dug out at Veerapandi in Madurai District in July, 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) வீரபாண்டி கண்ணீஸ்வரமுடையார் கோவிலில் திருமண மண்டபம் ஒன்று கட்டுவதற்காக அடிக்கல் நாட்டும்போது, ஈஸ்வரர், ஈஸ்வரி, ஸ்கந்தர், நடராஜர், சிவகாமசுந்தரி, பீடம், சந்திரசேரர், அம்மன் ஆகிய எட்டு திருஉருவச் சிலைகள் கிடைக்கப்பெற்றன.

முற்பகல் 10-00 திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இங்கே கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களையெல்லாம் கோயிலில் பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, அங்குள்ள மக்களும் பக்தர்களும் கேட்டுக்கொண்டபடி, அந்தச் சிலைகள் தற்காலிகமாகக் கண்ணீஸ்வரமுடையார் கோயிலில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கான மற்ற வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தச் சிலைகள் எல்லாம் எந்த உலோகத்தினால் செய்யப்பட்டவை ? அவைகளின் மொத்த மதிப்பு எவ்வளவு இருக்கும் ? அவை எந்த நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்தவை ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தச் சிலைகள் எல்லாம் 'காப்பர் அன்ட் ப்ரான்ஸ்' என்ற இரண்டுவித உலோகங்களினால் செய்யப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோயில் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் இந்தச் சிலைகளும் பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவையாக இருக்குமோ என்று எண்ணுகிறார்கள். இடைக்காலத்தில் முஸ்லீம்கள் படையெடுத்த காலத்தில் சிலைகளைக் காப்பாற்றி வைக்கவேண்டுமென்ற எண்ணத்தினால் பூமிக்குள் புதைத்து வைக்கப்பட்டனவோ என்று கருதப்படுகிறது. அதற்குமேல் விவரங்கள் ஒன்றும் இதுவரை தெரியவில்லை.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, விலையுயர்ந்த சிலைகள் எங்கு தோண்டியெடுக்கப்பட்டாலும், அங்கேயே ஒரு கோயிலை எழுப்பி அதில் வைத்துவிடுகிறார்கள். இனி எந்த இடத்தில் எடுத்தாலும் அவைகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்து, தொல்பொருள் காட்சிச்சாலையில் வைத்து, 'இந்தப் பொருள் இன்ன நாளில், இன்ன இடத்தில் கண்டெடுக்கப்பட்டது' என்ற விவரக் குறிப்புக்களை எழுதி வைத்துப் பாதுகாக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும். ஆனால் அந்தந்தப் பகுதி மக்கள் கண்டெடுத்த பொருள்களை அரசாங்கத்திடம் கொண்டுவந்து கொடுக்கிறார்களா என்பதைப் பொறுத்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வினா நேரத்தில் ஓர் அமைச்சரிடம் கேட்ட வினாவிற்கு மற்றோர் அமைச்சர் வினா கேட்ட உறுப்பினரிடமே ஒரு வினா கேட்டது குறித்து.

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir. In all Parliamentary democratic institutions like the Mother of Parliaments in England, the Lok Sabha and the Rajya Sabha in Delhi and our Tamil Nadu Legislative Assembly, the first hour is set apart for question time. In the question time there is almost a battle of wits between the Ministers and the members who put questions irrespective of the political party to which they belong. It is the prerogative of members to put questions and it is the duty of the Ministers to answer. With due deference to my good Friend Mr. P. U. Shanmugam, I wish to say that he put a question and asked me to answer. I could have answered, but I did not answer because I did not want to spoil the prevailing good spirit. Was the Hon. Minister in order in putting a quetion to me and in my not being allowed to answer? I want a ruling on this.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் மன்றத்திலே கேள்விகள் கேட்பதற்கும், அமைச்சர்கள் பதில் அளிப்பதற்கும் உரிமை இருக்கிறது. அமைச்சர்கள் பதில் சொல்லும்போது சில நோங்களில் பதில் கூட கேள்வி ரூபத்திலே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். Even the answers can be in the form of questions.

THIRU K. VINAYAKAM : The question was addressed to the Education Minister and it is the Education Minister who has got to answer me, or put a question by way of answer.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள், அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு இருக்கிறது என்பதை உணருவார்கள். சில சமயத்தில் திரு. விநயகம் அவர்கள் செய்யக்கூடிய தவறுகளையும் சுட்டிக்காட்டக்கூடிய பொறுப்பு இருக்கிறது. கல்வி, மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் உள்ள கூட்டுப் பொறுப்பில் உள்ளது என்று சொல்லுகிறார்கள். மாநில சர்க்காருடைய அதிகாரத்தில் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.